ஜனவரி பெப்ரவரி
1977

# கலகலப்பு

விலை 50 சதம்

நகைச்சுவை மாத இதழ்


எமது கலகலப்பான பொங்கல் நல்வாழ்த்துகள் — சாந்தி தோட்டம்



யாழ் ராஜாவில்

ஈஸ்ற்மென் கலர்

தேவரின்



திருவருள்

வெகு விரைவில் எதிர்பாருங்கள்

யாழ் வின்சர் திரையில்

அபூர்வ ராகங்கள்

- புதுமைப் படைப்பு
- கமலஹாசன்
- ஸ்ரீவித்தியா
- ஜெயசுதா
- சுந்தரராஜன்
- நாகேஷ்
- நடித்தது

புரட்சி இயக்குனர்:
K. பாலச்சந்தரின்



மங்கலமாய் மனையதனில் தானேங்க
உங்களது நண்பர்களை மகிழ்வூட்ட
எங்களது இன்சுவையை சுவைத்திடுவீர்!
எந்நாளும் இன்புற்று வாழ்ந்திடுவீர்!!

சுபாஸ் கபே SUBHAS Caffe

குளிரூட்டப்பட்டது

போன்: 578

சுத்தமான சுவையான உணவு வகைகள்
நித்தம் நித்தம் உவகையூட்டும் ஐஸ் கிறீம் வகைகள்
மற்றும் பற்பல உணவுகளை என்றும் சுவைத்து மகிழ நாடுங்கள்.

176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உல்லாசப் பிரயாணிகள், நண்பர்கள் அனைவரையும் களிப்பூட்டி கௌரவிக்க சிறந்த இடம்.

நல்லின முந்திரிகைக் கன்றுகளுக்கு
நாடுங்கள்

சாந்தி தோட்டம்

இணுவில்

★ சிறந்த அச்சுவேலைகளை
★ குறிப்பிட்ட நேரத்தில்
★ சிறப்பன முறையில்
★ செய்திட

சாந்தி அச்சகம்

நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணம்.

யாழ் லிடோ சினிமாவில் ★

★ 21ல் முதல் காட்சியளிக்கிறது

A.V.M. ராஜன் P. நிர்மலா சோ
நடித்த

வீட்டுக்கு வந்த மருமகள்

யாழ் ஸ்ரீதர்

வசூல் நிறைந்த
2வது மாதம் ★

உலகம் சுற்றும் வாலிபன்

ஈஸ்ற்மென் கலர்

கோவில் அபிஷேக
திரவியங்கள்
பெற்றிட
நாடுவீர்!

ராஜா
மெடிக்கல் ஸ்ரோஸ்

புதிய சந்தை கட்டிட
முன்பாக

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்

உங்களுக்குத் தேவையன மின்சார உபகரணங்கள்
மின்சார நீரிறைக்கும் இயந்திரம்
சைக்கிள் உதிரிப் பாகங்களுக்கு நாடிடுவீர் !

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
போன்: 7016
141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

யாழ் ராணி திரையில்

முத்துராமன், ஜெயா, லட்சுமி
நடித்த

卐 சிறந்த குடும்பச் சித்திரம்

கனிமுத்துப் பாப்பா

விவசாயிகளே! உங்களுக்குத் தேவையான
சகல விதமான தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள்
உதிரிப்பாகங்கள் மற்றும்
மோட்டார் உதிரிப்பாகங்கள் சகாயமாகப் பெற்றிட

சேகர் மோட்டோர்ஸ்
118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

யாழ் வெலிங்டன் திரையில்

கலைக்குரிசில்
சிவாஜி ★ மஞ்சுளா

மன்னவன் வந்தானடி

ஈஸ்ற்மென் கலர்

மானிப்பாய் வெஸ்லி திரையில்

அவள் காட்சியளிக்கிறது
ஒரு தொடர் கதை



யாழ் மனோகராவில்
28 முதல்

எம். ஜி. ஆர்.
ராதாசலுஜா
வீரப்பா
லதா
நடித்த

இதயக்கனி

ஈஸ்ற்மென் கலர்

நகைச் சுவை தரும் கலகலப்பு ஆசிரியர் எஸ். கே. திசன் (IF Y.E) உதவி C. S. பாஸ்கர்



## தைத்திங்கள் 1977

அன்பு வாசகர்களே !

ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்நேரத்தில், தங்களுடைய பாராட்டுக்கள், கேலிகள், திட்டுக்கள், ஏச்சுக்கள் போன்றவற்றால் நீங்கள் வளர்த்த கலகலப்பு இலங்கையின் சகல பாகங்களிலும் அனேக இளம் உள்ளங்களை தழுவி வருவது, எம்மை விட, வாசகர்களாகிய உங்களுக்கே பெரும் மகிழ்ச்சி தரும் என்று நினைக்கிறோம். இன்று நாகரீகம் என்ற பேரில், நடை, உடை, பாவனைகளில் ஏற்பட்டு வரும் மாற்றத்தையும், வெளிநாட்டு மோகத்தையும், எமது பண்பாட்டை சிதைக்கக் கூடிய செயல்களையும், நயமாகச் சுட்டிக் காட்டி நகைச்சுவை ஆக்கங்களால் தவறுகளை சாடும் எமது முயற்சியை போற்றுவார் போற்றட்டும், தூற்றுவார் தூற்றட்டும்...... தொடர்ந்து கிறுக்குவோம்.

அன்புள்ள
தீசன்

## அவன்தான் மனிதன்



சுந்தரம்: எப்படியப்பா இந்தமுறை பொங்கல் ?

சின்னையா: எனக்கு அவ்வளவு சிலவில்லை

சுந்தரம் : ஏனப்பா ?

சின்னையா : பக்கத்து வீட்டுக்காரரர் என்னோடை சரியான கொழுவல் வெடியைக் கொழுத்தி நெடுகிலும் என் வீட்டுக்கையே போட்டுக் கொண்டிருக்கிறார் அதனாலே எனக்கு அவ்வளவு செலவில்லை.

சுந் : ?...........

—போ—

## பத்தவுன்ஸ் பாணில் இரண்டவுன்ஸ் வண்டு ! இடையிடை அதுவும் பச்சையாய் உண்டு !

பேக்கரியெங்கும் வளருது கியூக்கள்
காட்டுடன் சில்லறை காசுடன் சிறுவர்
மாடமாளிகை கூட கோபுரம்
கொண்டவருடனே இல்லாதவரும்
அத்தனை பேரும் ஒன்று திரண்டு
ஓரிரு றாத்தல் பாணுக்காக.

காக்கிச்சட்டை கருநிறத் தொப்பி
அணிந்த பொலீசார் அவரையடக்க
பத்தும் பறக்கும் பசியது வந்தால்
அவரது பசிக்கு பொலிசாரோ தூசு
சாதி சமயம் தராதரமின்றி
சரிசமமாக அவர்க்கொரு றாத்தல்.

திருவெம்பாவை தொடங்கிய காலம்
கோயிலின் முன்னே கூடுவார் தொண்டர்
பக்தியில் சிறந்த பசியதைப் போக்க
பேக்கரி முன்னே திரண்டனர் தொண்டர்
பத்தவுன்ஸ் பாணில் இரண்டவுன்ஸ் வண்டு
இடையிடை அதுவும் பச்சையாய் உண்டு
பாவம் மக்கள் வாழ்கிறார் உண்டு.

★ இணுவையூர்; வாலி ★

தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த இதழ் உரிய காலத்தில் வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம்.

( ஆ—ர். )

தணிக்கை செய்வதற்கேற்ற
விடயங்கள் நாம் எழுதவில்லை.

## உலகம் பலவிதம்

## இனும் ரூபா 1000/-

### காணவில்லை

சுமதியின் ஆருயிர் ரோஸியைக் காணவில்லை. நிறம் சாதுவான வெள்ளை, வயது 4, உயரம் (சரியாகத் தெரியாது) பொங்கலுக்கு பக்கத்து வீட்டுக்காரரும் அவ்வூர் இளைஞர்களும் கொழுத்திய வெடித் தொல்லை பொறுக்காமல், கட்டிய சங்கிலியுடன் வீட்டைவிட்டு ஓடிவிட்டது. கடைசியாக கோம்பா (தட்டுப்பாட்டிலும் கஷ்டப்பட்டு வாங்கியது) சோப் போட்டு குளித்த வாசனை வீசும், இது குலைக்கும்போது இனிமையான குரலாக இருக்கும், வால் வளைந்திருக்கும்.

நேரிலோ அல்லது அருகிலுள்ள மிருகவைத்தியர் மூலமோ தகவல் தரவும்

ரோஸியின் பிரிவால் வாடும்
சுமதி
மற்றும் பக்கத்து வீட்டு



ஜிம்மி
பொம்மி
ரைகர்
லூசி

### யாருடையது ?

ஐந்து வயது நிரம்பிய அல்சேசன் நாய் ஒன்று வீதியில் துரத்திப் பிடிக்கப்பட்டு, தகுந்த பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. அதன் கழுத்துப் பட்டியில் அதன் பிறந்த திகதியும் இறுதியாக அதன் பிறந்த தினத்திற்கு இலண்டனில் இருந்து கிடைக்கப்பெற்ற வாழ்த்துத் தந்தியும் உள்ளன. தகுந்த ஆதாரங்களுடன் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பொங்கலோ பொங்கல்!

(பாஸ்கர்)

மினியுடை மாட்டி
குனிந்திடா நின்று
வீட்டின் முன்னே
கோலம் தீட்டி
ஓட்டைப் பானை
அடுப்பில் ஏற்றி
நீரைச் சேர்த்து
பாலை விட்டு
அரிசியை அள்ளி
கல்லுடன் கொட்டி
எறும்பு மற்றும்
துரும்பும் சேர்ந்த
சக்கரை சற்று
மண்ணுடன் இட்டு
சீறிச் சினக்கும்
வெடியும் சுட்டு
அமுது படைக்கும்
பொங்கலோ!
பொங்கல் !

### தேவை !

நல்லரக கடிநாய் தேவை

அன்றாடம் எங்களுக்கு உபத்திரவம் தரும் பக்கத்து வீட்டுக்காரரை அடக்குவதற்கும் கடன்காரரை வீட்டிற்கு வராமல் செய்வதற்கும் நல்ல ரக கடிநாய் ஒன்று உடனடியாகத் தேவை (விசர்நாயாக இருந்தாலும் பரவாயில்லை) நேரிலோ அல்லது V P P மூலமாகவோ அனுப்பவும்

கு.கு. ஏற்கனவே இருந்த நாய் பக்கத்து வீட்டுக்காரர் வெடி கொழுத்திப் பயமுறுத்தியதால் வீட்டைவிட்டு ஓடிவிட்டது.

எனவே சிறந்த நாய் அல்லது செவிட்டு நாய் விரும்பத்தக்கது.

### வாழ்த்துக்கள் !

வெள்ளவத்தையைச் சேர்ந்த செல்வி சுப்பையா சுசிதா ஏழாம் முறை 7வது முறையாகக பொ. த. (சாதாரண) பரீட்சை எடுப்பதை முன்னிட்டு, அவர் வழமைபோல, பரீட்சையில் 8 F எடுக்காமல் சித்தியடைய வேண்டுமென அப்பு, மாமி, அப்பப்பா, அப்பாச்சி, பாட்டா, தம்பி, ரைகர் மற்றும் இவருடன் பலமுறை பரீட்சை எடுத்த சுசி, சீலா, பீட்டர், கலா, சுமதி, மகேஸ்வரி, ஆகியோரும் பழைய காதலர்களான சேகர். சுதாகர், பெர்னன்டோ, ரகீம், டேவிட் ஆகியோரும், தற்போதைய காதலர்கள் யோகன், முனுசாமி, கணபதி ஆகியோரும் வாழ்த்துகிறார்கள்.

### குருவி வானம் கொண்டையில் புகுந்தது!
### கொண்டாட்டம் முடிவில் திண்டாட்டமாய் முடிந்தது!

தைப்பொங்கல் முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களினால் விடப்பட்ட சம்பியன் மார்க் குருவிவாணம்ஒன்று கறுத்தார் சின்னத்தம்பியரின் ஆருயிர் மனைவி பொன்னம்மாவின் தலைக் கொண்டையினுள் புகுந்து கொண்டதை தொடர்ந்து முடிமயிர் உட்பட தலைமயிரும் எரிந்து கொண்டிருந்தபோது, அவரின் கணவரின் துணிகர முயற்சியினால் மயிரிழையில் உயிர் தப்பினார். புலன் விசாரணையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். சந்தேகத்தின் பேரில் அடுத்தவீட்டைச்சேர்ந்த அன்னம்மாவின் அருந்தவப் புதல்வன் யோகன் மேற்படி சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்படலாமென நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன,

இ நன்றியுள்ள மகனைவிட நாய்கள் மேலடா (படம்: படிக்காதமேதை) இ

# ஹிப்பிலியாதித்தன்

★ எல்லோரும், வேதாளம் சொல்லும் கதையை ருசியாகப் படித்திருப்பீர்கள்

ஆனால் இதோ நவீன

## ஹிப்பிலியா தித்தன்

''சங்கக் கடையுடையோர் பயன்பெறுவர் மற்றெல்லாம் கூப்பனுடன் கியூவிலேதான் — இனுவை வாலி

தன் பரீட்சையில் அக்கம் பக்கமிருப் போரையெல்லாம் பார்த்து எழுதியும் அழகாக 3 பாடங்களுக்கும் (F) எவ் எடுத்த சுமதி

மீண்டும் மனந்தளராமல் தனது பாடசாலை புத்தகம், கொப்பிகளையெல்லாம் எடுத்து கொப்பிக்குள் இருந்த காதல் கடிதங்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு தனது அபிமான பாடமான ஆங்கிலக் கொப்பியை எடுத்து படிக்க ஆரம்பித்ததும் கட்டுடுரைக் கொப்பிக்குள்ளிருந்து கலகலவென சிரித்த வண்ணம் ''ஹிப்பிலியாதித்தன்''

கூறத்தொடங்கியது.

கேளாய் பெண்ணே சுமதி! ஒரு வருடத்தில் 365 நாட்கள் அதிலும் பாடசாலை நடைபெறுவதோ? நாட்கள் தான் இவற்றினிலும் தலையிடி காச்சல் தடிமல் ஜலதோசம் ஆர்ப்பாட்டம் பிறந்த நாள் போன்றவை போக

நாட்கள் எஞ்சுவதோ கடினம் இந்த நாட்களிலும் ஆசிரியர் வரும் நாளில் நீ போகமாட்டாய் நீ போகும் நாளில் ஆசிரியர் வரமாட்டார்

அப்படியாயின் உனது படிப்பு? எனக் கூறிக் கொண்டிருக்கையில் சுமதியின் கண்களில் நீர் மல்கத் தொடங்கியது.

ஏன் வீணே அழுகிறாய் சுமதி உன்னை நினைத்து வகுப்பில் உனக்காகவே ஏங்கி பரீட்சையில் குண்டடித்து டியூடரி டியூடரியாக அலைந்து இப்போ கண்ணீர் வடிக்கும் காளையர் எத்தனைபேர்.

நீ மட்டும் சளைக்காமல் எத்தனைபேருக்கு கடிதங்களை கொடுத்தாய் உன்போன்றோரால் வெளிநாட்டிலிருந்து பேப்பர் இறக்குமதிக்கு வெளிநாட்டு செலவாணி வீணாகிறது ஒரு நாளில் இந் நாட்டில் எத்தனை அந்தர் பேப்பர் வீணாகிறதோ!

கூறவும் சுமதியின் முகம் கோபத்தாலும் வெட்கத்தாலும் சிவந்துவிட்டது.

தயவு செய்து என்னை டிஸ்ரொப் பண்ணாதே! நான் இம்முறையாவது பரீட்சை ஒழுங்காக பாஸ் பண்ணவேண்டும் என அழக்குறையாக சுமதி கூறவும்

கலகலவெனச் சிரித்து

மீண்டும் கூறத் தொடங்கியது.

தங்காய் சுமதி நான் கூறும் கதையை வடிவாகக் கேள்.

## கிருஸ்ணபரமாத்மா!

### சங்கக்கடை மனேஜரா

எனவே மாணவர்களே, கிருஸ்ணபரமாத்மா அதாவது 'கண்ணனின்' அற்புதங்கள் அலாதி

பல அற்புதங்களைச் செய்துள்ளார்

பாஞ்சாலியின் துகிலை துச்சாதனன் உரியும் போது. சளைக்காது துணியை வழங்கினார் கிருஸ்ணன்

''இதிலிருந்து என்ன விளங்குகிறது?''

ஒரு மாணவன்

அவர் சங்கக் கடையில் ஏதோ துணி வழங்கும் பகுதியில் இருந்திருக்கிறார் அல்லது அவருக்கு ஏது அவ்வளவு துணியும்?

ஆசிரியர்? !..!. — டோ

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் ஒரு கிராமத்தில் காலம் தவறாது பூஜைகள் விரதங்களை பேணிக்காத்த குடும்பத்தினருக்கு இறைவன் கிருபையால் ஒரு இலட்சம் கிடைத்தது [மன்னிக்க வேண்டும் ஒரு ஆண்மகவு கிடைத்தது[ பையன் சினிமாப் பருவம் அடைந்ததும் அதாவது எட்டாம் வகுப்பு வயது இந்த வயதில் தாய் தந்தையர் அறியாமல் சினிமா போக பழகுகிறார்கள் மாணவர்கள் அது தான் சினிமாப் பருவம்

ஒவ்வொரு பாடத்திற்கும், 2க்கு குறையாத ஆசிரியர்கள் பிரத்தியேக போதனை போதித்து அவன் 4 பாடங்களில் சாதாரண சித்தியடைந்தது அக்குடும்பத்தினருக்கு பெரும் பெருமையைத் தந்தது.

தந்தைபடிக்கும்போது 2 பாடம் சித்தியடைந்தாராம். மகன் 4 பாடம் தந்தை 4 அடி பாய்ந்தால் மகன் 8 அடி இப்படியே 4 பாட சான்றிதழுடன் எவ்வித அரசாங்க உத்தியோகமும் கிடையாமையால்

அவர்கள் செய்த பூஜை விதரம் தொண்டு ஒன்றே திரண்டு அவனுக்கு சங்கக்கடையின் மனேஜர் பதவி கிட்டியது.

தொழிலெல்லாம் நற் தொழிலல்ல சங்கக்கடை மனேஜர் தொழிலே தொழில் என யாரோ கூறியது போல அவருக்கு இக்கால தெய்வங்களுக்குச் செய்த அர்ச்சனை பலனைக் கொடுத்தது.

விவசாயம் என்றால் என்னென்று தெரியாத அவர் வீட்டில் பலசரக்கு வகைகளும், மாவு, சீனி பருப்பு சர்க்கரை இன்னோரன்ன பிறவும், தேங்கிக் கிடந்தன. எறும்பு, ஈ, காக்கா, மற்றும் மிருகங்கள் அவர் வீட்டை வட்டமிட்டன.

தட்டுப்பாடென்ற சொல்லிற்கோ இடமில்லை.

அவர் வீட்டு நாய் லக்ஸ்பிறே தவிர வேறொன்றும் குடியாதாம் அதனை பெருமையாகக் கூறிக் கொள்வர் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என படித்தார் ஒருவர்.

தன்னைக்கண்டு தானம் வழங்கென்றார் இன்னொருவர்.

இரண்டாவதையே எம்மவர் கடைப்பிடித்தார் மாமேதை, மனேஜர் மகான் அவர்கள்.

நிலத்தில் வீழ்ந்த அரிசி விதவிதங்களுடன் வாரி அள்ளி கலந்து மக்களுக்கு இன்முகத்துடன் வழங்குவதை மக்கள் மண்வாரி திட்டுவதை கூறனான்.

எண்ணிலடங்காது.

எடுத்துரைக்க முடியாது, சுமதி! என்ன ஆச்சரியப்படுகிறாயா?

இதுமட்டுமல்ல மேற்படி மனேஜருக்கு அவர் செய்த பாவ புண்ணியங்கள் ஒன்று திரண்டு ஒரு ஆண்மகவு பிறந்தது அவனும் 18 வயது நிரம்பியதும் வீதி வீதியாக சந்தி சந்தியாக அலையத் தொடங்கினான்.

ஏன் எதற்காக என தன்னை மறந்தே கேட்டுவிட்டாள் சுமதி. மீண்டும் சிரித்தவண்ணம் கூறத் தொடங்கிய இள வயதில் காதலுக்காகவோ இளம் பெண்களுக்காகவோ அவன் ஏங்கி அலையவில்லை.

ஒரு சங்கக்கடை மனேஜரின் மகனுக்கா, காதலுக்கு பஞ்சம்? அவனுக்கு பின் நூற்றுக்கணக்கான பெண்கள் படையெடுக்க மாட்டார்களா?

டில்லி எருமைபோன்று உண்டு கொழுத்து. கூப்பனுக்கு விழும் துணிகள் அதிஸ்டத்தின் மூலமோ துரதிஸ்டத்தின் மூலமோ விழச்செய்து நாளொரு பெல்ஸ்சும் பொழுதொரு சாரமுமாக திரியும் அவனுக்கா பஞ்சம் சுமதி?

இன்று டாக்டர் இஞ்சினியரை விட மனேஜருக்குதானே மதிப்பு அதிகம், கட்டிய மனைவிமாரை கண் கலங்காமல் பார்ப்பது அவர்கள்தானே! என்றதும் சுமதியும் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

நான் கூறிக்கொண்டிருப்பதைக் கேளாமல் நீ வேறு சிந்தனையில் இருப்பதால் எந்தத் திறமையானவர்களைக் கொண்டு நீ பரீட்சை எழுதினாலும் கொம்பியூட்டர் மீதானையாக நீ F. எடுக்கக் கடவாய் என கூறி மீண்டும் சுட்டுரைக் கொப்பிக்குள் மறைந்துவிட்டது.

## ஆங்கிலத்திற்கு வயது வந்துவிட்டது
## தமிழுக்கு வயது வரவில்லை

பாடசாலை மாணவர்கள் 15 16 வயதுடையோர் பெற்றோருடன் அல்லது தனித்து படத்திற்கு சென்றால் தமக்கு 11 வயது எனக்கூறி அரைரிக்கற் பெறுகின்றனர். ஆனால் வயது வந்தோருக்குமட்டும் (அடல்ஸ் ஒன்லி ஆங்கிலப்படம் வந்தால் தமக்கு 18 வயது எனக்கூறி ரிக்கற் எடுக்கின்றனர்,

எப்படி இந்த இளைஞர்களின் யுக்தி?

தமிழுக்கு அரை

ஆங்கிலத்திற்கு முழுசு.

—டோ

## எத்தனையோ, பேய்களுண்டு
## அறிந்திடுவாய் ஆண்மகனே!

பதினாறு வயதினிலே பரீட்சையில் வெல்ல வென்று
பகல்நேர வகுப்பிற்குள் பாய்ந்திட்ட வேளையன்று
முகிலாடும் கூந்தலுடன் முத்தழகுக் கன்னி ஒன்று
திகிலோடு வந்திருந்து தவித்திடவே கண்டேனன்று!

முத்தழகுக் கன்னி அங்கு முன்வாங்கிலிருந்து கொண்டு
வித்தை போலென்மீது வினாக்களை தொடுத்து விட்
(டாள்,
அத்தனைக்கும் பதில்சொல்லி அன்பதனை கனியாக்கி
முக்திகளைப் பெற்றவன் போல் முப்பொழுதும் சுகம்
கண்டேன்!

எல்லையற்ற எமதன்பு எழிற்சியுறும் வேளையவள்
வில்லனாக வந்தவனை வேல்விழியாள் சுருட்டிவிட்டாள்
தொல்லைபல எழுந்தெந்தன் இதயத்தை துளைத்த
(போதும்
எல்லைதனை எதிர்பார்த்து ஏமாற்றம் நானடைந்தேன்!

பலவில்லன், பல கடிதம் பயனற்றுப் பறந்த போது
நிலைசற்று மோசமென்று நீக்கிவிட்டார் ஆசிரியர்
குலமங்கைப் பெண்ணுக்கு கூடாதெனச் சொல்லிடவே
பயனில்லை எனக்கூறி பிரிவையே வேண்டி நின்றாள்!

என்வாழ்வைக் கெடுக்க வந்த பெண்துரோகி இவள்போல
எத்தனையோ பேய்களுண்டு அறிந்திடுவாய் ஆண்மகனே!
பொன்னான உள்ளத்தைப் புண்ணாக்கி விட்டிடுவார்
பெண்பேயை விலத்தியே புத்தியாய் வாழ்ந்திடுவீர்!


பேயைக் கண்டு பேயானவர்
உடுவை — விஜி

அரிய சந்தர்ப்பம்!

இளம் விவசாயக் கழக அங்கத்தவர்களுக்கு கழிவு விலையில், குறைந்த செலவில், சிறந்த மண்வெட்டிகள் வழங்கப் படுகின்றன.

மேலதிக விபரங்கட்கு:
விவசாயப் பகுதி
கலகலப்பு,
இணுவில்.

உள்ளூர் விளைபொருட்களை
நல்ல முறையில் லாபகரமாக
சந்தைப்படுத்த
அம்பாள் ரேடிங் கம்பனி
78, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11



# பேயானாலும் பெண்சாதி

## 'நாயானாலும் நாயகி'

இணுவையூர் பாஸ்கர்

''மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின்
— வாழ்க்கை
எனை மாட்சி தாயினு இல்'

ஆம்! ஒருவனுடைய வாழ்க்கையில் சகல வளங்கள் இருந்தபோதும் மனைவியானவள் சீராக அமையா விட்டால் அவனது வாழ்க்கை சௌகரியம், சந்தோசம் போன்றவை அற்றே இருக்கும்.

மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது, உதவியானது என்று கருதப்படுவதால் தான், ஒருத்தியை ஒருவன் தனது வாழ்க்கைத் துணைவியாக அமைத்துக்கொண்டு விடுகிறான்.

ஆனால், விதிப்பயனோ, அல்லது வினைப் பயனோ சிலருக்கு அமையும் வாழ்க்கை துணையானவள் அவனுக்கு அவனது இல்லறத்தைத் நல்லறமாக்கும் தூய பணியை விடுத்து பெரும் உபத்திரவமாக இருந்து விடுகிறாள்!

தானாகத்தேடி எடுத்தோ அன்றி பெற்றோர் பேசி முடித்தோ அமைக்கும் இல்லற வாழ்வில் துணைவியாக அமைபவள், அவள் எப்படிப்பட்டவளாக இருந்த போதிலும் (பேரும் இராட்சசியாகவோ பேய் பிசாசாகவோ, எருமை, கழுதை போன்ற இன்னோரன்ன மிருகங்களோ வேறேதாவது பயங்கரமான மிருகமாகவோ)

அவளோடு ஒத்து, அனுசரித்து வாழ்க்கை நடத்துவதோ இன்றைய கணவன் மாருக்குச் சிறப்பாகும்.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற விலை மதிப்பற்ற நிலைமை போல் இன்று அடித்தாலும் அவன் கடித்தாலும் வாழ்க்கைத் துணைவி! என்ற மனத்தையுருக்கும் பரிதாபகரமான நிலை உருவாகி யிருக்கிறது.

சில அப்பாவிக் கணவன் மார்கள் எக்கச்சக்கமாக சீதனத்தை தன் மானத்தை இழந்து வாங்கிக் கொண்டு ஒருத்தியை மணந்த பின்னர், இஸ்டத்திற்கு சீதனத்தைச் சீரழித்து விட்டு, அவளோடு வளமாக வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியாது. அவளை விவாகரத்து செய்யவும் முடியாத இக்கட்டான நிலையில் திக்குமுக்காடிக் கொண்டு இருப்பது இயற்கையாக இன்று இருக்கிறது.

சிலர் பெண்ணின் குணத்தைப் பார்க்காது அவளின் பணத்தை மட்டும் நன்கு அலசி ஆராய்ந்து பார்த்து மற்றவர்கள் பாராட்ட வேண்டும். மூக்கின்மீது விரலை வைத்து வியக்க வேண்டும் மென்ற பேரவாக் கொண்டு அவளை மணந்து கொள்ளுகிறார்கள். (13-ம் பக்கம்)

எங்கள் திருநாளாம்
இனிய பெருநாளில்
பொங்கும் இன்பங்கள்
பெருகிட வாழ்த்துகின்றோம்!

மாரியப்பா அன் கோ.
44, 46, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11
போன்: 24365

வெள்ளி விழாக்காணும்-இளம்
விவசாய நண்பர்கட்கு
அள்ளியே வாழ்த்துக்களை-நாம்
அன்புடன் கூறுகிறோம்!
கிருமி நாசினி, களைகொல்லி,
உரவகை போன்றவற்றிற்கு
யாழ்நகரில் சிறந்ததோர்
ஸ்தாபனம்

வின்ரோ
6, நவீன சந்தை,
(மேல் மாடி) யாழ்ப்பாணம்

சிந்தை மகிழ சிறந்த இசைத் தட்டுக்கள் எந்நாளும் வாங்கிட இன்றே நாடிடுவீர்!

சிறந்த தமிழ், சிங்கள, இந்தி அடங்கிய திரைப்பட, பொப்பிசை, மற்றும் பக்திப் பாடல்கள் போன்றவற்றை வாங்கவும்,
ரேப்பில் பதிவு செய்யவும்
இன்றே தொடர்பு கொள்ளவும்.

சந்திரா ரெக்கோட் (B)பார்
20, ஜுபிலி பஜார், யாழ்ப்பாணம்

மு. கு.

வாசகர்களே !

முக்கியமாகங் பெண்களைப் பற்றி புகழ்ந்து எழுதியிருக்கும் மேற்படி கட்டுரை பற்றி உங்கள் ஆதரவு, பாராட்டுகளை, எதிர்ப்புகளை தெரிவிக்க விரும்புவோர்.

கண்டனப் பகுதி
கலகலப்பு, இணுவில்
என்ற முகவரிக்கு எழுதவும்

என்னுடைய தாய்நாடு எனக்கு மேலானது ஆனால் தாய் நாட்டு சுதந்திரம் தாய் நாட்டைவிட மேலானது

## தைப்பாவை!

கவியரசு கண்ணதாசன்

மார்கழிக்குப் பெண்ணாக
மாசிக்குத் தாயாகப்
பேர்சொழிக்க வந்த
பெட்டகமே! தைப்பாவாய்
ஊர் களிக்கும் நேரம்
உத்தமனோடி ரவெல்லாம்
சீர்தழுவிச் சோர்ந்தாள்
சிற்றன்னம் கண்துயில்வாள்
ஓர் குழவி இல்லாள்
உளங்குழல் யானுள் தம்
கார் குழலை நீவிக்
கை சோத்துக் கொண்டிருக்கும்
பேராளன் சற்றுப்
பிரிந்தால் அவள் எழுவாள்
வாராய் அவளின்
மயக்கந் தீர் தைப்பாவாய்!

## எப்படிப் பாடினரோ!

பின்னணிப் பாடகர் ரி. எம். சௌந்தரராஜன் தனது பக்திப்பாடலொன்றில்,

முருகா என்றழைக்கவா — முத்துக்
குமரா என்றழைக்கவா?
கந்தா என்றழைக்கவா — கதிர்
வேலா என்றழைக்கவா ?
எப்படி அழைப்பேன் உன்னை
எங்கே காண்பேன்!

என்று சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார். அவருடைய சந்தேகத்தை தீர்ப்பதுபோல சீர்காழி கோவிந்தராஜன் இப்படிப் பாடியிருக்கிறார்.

முருகன் என்றழைத்தாலென்ன!
குமரா என்றழைத்தாலென்ன!
கந்தன் என்று உரைத்தாலென்ன!
கார்த்திகேயன் என்றால் தானென்ன!
எப்படியும் அழைக்கலாம்!
எங்கிருந்தும் காணலாம்!

அனுப்பியவர் செ. இருதயநாதன்
அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

பாடசாலை மாதாந்த தேர்வு நாளன்று திடீரென சரித்திர ஆசிரியர் வராமற் போகவே, தலைமையாசிரியரின் உத்தரவின்படி விஞ்ஞான ஆசிரியர் தயாரித்தளித்த வினாத்தாளின் ஒருசில பகுதிகளைக் கீழே தருகிறோம்.

# நவீன சரித்திரம்

(பள்ளியாசிரியர்கள் டியூட்டரி ஆசிரியர்கள் போன்றோர் மன்னிக்க)

**கீழ்வரும் வினாக்கள் 8 இலும் 5 க்கு மட்டும் விடையளிக்கவும்.**

(விளக்கப்படங்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்)

1. சங்கிலி அரசனின் முகத்தை வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.
2. கலிங்கப்போர் அசோகன் மனத்தில் விளைவித்த மாற்றம், பௌதிக மாற்றமா அல்லது ரசாயன மாற்றமா?
   பவுண் தங்கத்தால் ஆனது?
   செப்புக் கலப்பிருப்பின் அதன் விகிதாசாரத்தைக்
3. ஷாஜஹான் செய்த மயில் சிம்மாசனம் எத்தனை கூறுக
4. முகம்மது துக்ளக் வெளியிட்ட தோல் நாணயங்கள் பாசிபிடித்தல், பூச்சி அரித்தல் இவைகளால் கெடாமலிருக்க அவர் கையாண்ட முறைகளைச் சுருக்கிக் கூறுக.
5. நேருவின் ஆகர்ஷண சக்திக்கு நான்கு உதாரணங்களைத் தருக.
6. உப்பு சத்தியாக்கிரகத்தில் உப்பை எடுக்க உபயோகித்த முறைகளை மூன்று வரிகளில் தெளிவாக எழுதுக.
7. இப்ராகீம் லோடிக்கும் பாபருக்குமிடையே கடுமையாக நிகழ்ந்த முதல் பானிப் பட்டுப் போரின் உக்கிரத்தைச் சரியான 'சென்டிக்கிரேட்'டிலோ, அல்லது 'பரன்ஹைட்டிலோ' கூறுக.
6. தாவரங்களுக்கும் உயிருண்டு என்ற பேருண்மையை ''பாரிவேந்தன்'' வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் விளக்குக.

தொகுத்தவர் :
இரா. சிவலிங்கம்
கல்மடு,
வவுனியா.

பொங்கும் பொங்கல்
பொலிந்து சிறக்க
எங்கள் அரிசி
அமுது படைப்பீர் !!

விநாயகன் அரிசி ஆலை
VINAYAKAN RICE MILL
கல்லில்லா சுத்தமான பெயர் பெற்ற அரிசி
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.
போன் : 302—சுன்னாகம்

பயிர் வளம் பெருக்கிடவே பாவனை செய்திடுவீர்!
வியத்தகுவிளைச்சலினை வயல்தனில் கண்டிடுவீர்!!
விவசாயத் துறையை வளமாக்க
சிறந்த விவசாய உபகரணங்கள்
கிருமி நாசினிகள், களை கொல்லிகள், உரவகைகள்
மற்றும் பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை
நிதான விலையில் நிறைவான முறையில் வாங்கிட
" ரேரு "
32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# சனத்தொகை பெருகுமா ?

## சாட்டில்லாமல் சாவில்லை அப்பபடியானல் ... ..,

நவீன சந்தை மேல்மாடியில் நின்று விளித்துக் கொண்டிருந்தார் அந்தப்பேர்வழி, இன்றைய இளைஞர்போல் ஒரு பெல்ஸ், 11 அடி தலைச்சடை, கையில் சிகரெட் அவரைத் தாண்டிச் செல்லும் போது ஹலோ? என்றவருடன் சென்றேன்.. அவரின் முகம் ஏதோ நொண்டிக் குதிரையில் பணம் கட்டியவர் போலிருந்தது?

வட்ஸ் இஸ் த மற்றர் என்றேன்!

கடமையே செய்ய முடியவில்லை என்ன செய்வது என்ருர்,

அட இந்த கலி காலத்தில் கடமையைப் பற்றி கவலைப்படும் ஒரே பேர்வளி.

ஏன் லஞ்சம் ஏதாவது வாங்கிவிட்டீரா ? என்றேன்.

நோ... நோ .. நோ

4, 5 நோக்களை அடுத்துச் சொன்ஞர்

Then what is your Problem

அதாவது நான் யமன் டிப்பாட்மென்ற் யமதூதுவன் கடந்த வாரம் 7, 8 உயிர்களைக் கோட்டை விட்டுவிட்டேன்.

ஏன் செக்கன் 'ஷோ' ஏதாவது பார்த்து நித்திரை தூங்கி விட்டீரா?

சீ, சீ

அப்படியானல்—!

ஒரு உயர் ஜீ சி ஈ பெயில் விட்டு பொலிடோல் குடித்து இறக்க வேண்டும் ஆகனல் அவனுக்குப் பதிலாக யாரோ எழுதி அவன் சித்தியடைந்து விட்டான்: உயிர் கவர முடியவில்லை.

மை கோட் .

அப்புறம்

காட் அற்றாக் உள்ள ஒருவர் அவசரத் தந்தி யொன்றைப் படித்து அந்த அதிர்ச்சியிலேயே இறக்க வேண்டும் ஆனல் தந்திகள் எல்லாம் தபாலில் வந்து விட்டது. அவனுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கவில்லை. அதனல் அவர் இறக்கவில்லை.

Next ..

சண்டையால் றெயிலில் விழுந்து தற்கொலைபுரிய வேண்டியவர்,

றேயில்வே ஸ்ரைக்கால் தப்பிவிட்டார்.

எனக்குச் சிரிப்பாக இருந்தது.

அப்புறம்

கணவன் துணி எடுத்துக் தரவில்லை யென்று ஒரு பெண் தூங்கிச் சாக வேண்டும். ஆனல் அவரின் அதிஷ்டம் கூப்பன் துணி சாறி மலிவாக கிடைத்துவிட்டது.

சென்ற வாரம் ஆப்பரேசனல் 6 உயிர்கள் இறக்க வேண்டும் ஆனல் டாக்டர்கள் சட்டப்படி வேலை. வேலை நிறுத்தத்தால் ஆப்பரேசன் நடக்கவில்லை. அதனல் அவர்களும் தப்பி விட்டார்கள்.

எ ண்ணும் போது அவரது கண்கள் கலங்கின.

நீங்களே சொல்லுங்கள் கடமையை செய்ய முடியுமா !

ஐயையே இப்படியே போனல் சனத்தொகை யெல்லவா கூடிவிடும் என்றேன்.

அதுதான் நானும் யமலோகத்தில் ஸ்ரைக் செய்ய வேண்டி வருமென்றுர்.

கெதியாகப் போங்கள் இப்போ பெண்கள் கூட உம்மையும் மடக்கிவிடுவார்கள் என்றேன்.

புன் சிரிப்புத் தவழ விடை பெற்றுர் அவர்.

— ரேடா

(யார் சொன்னது இது கற்பனை யில்லை யென்று )

எங்கும் இனிய மணம்
எழிலாய் திகழ்ந்திருக்க
பொங்கல் திருநாளில்
பாவனை செய்திடுவீர் !

ஜுபிலி பத்திகள்

தயாரிப்பாளர் :
நத்தாரம் பொத்தை.
குண்டசாலை.

தமிழர்கள் கொண்டாடும்
தீந்தமிழ் பெருநாளில்
அமுதான வாழ்த்துக்களை
அன்பாகக் கூறுகிறோம்!

பீப்பிள் றேட்ஸ் அன் சப்ளைஸ்

143, மலிபன் வீதி, போன்- 25389
112, 4ம் குறுக்குத்தெரு, போன்: 23509
கொழும்பு 11

நல்லவர்கள் போற்றுமிந்த
நயமான திருநாளில்
சொல்லரும் சிறப்பே காண
சிந்தையால் வாழ்த்துகிறோம்!

பாவனைக் குறுதியான பலரக
அலுமினிய கண்ணடிப் பாத்திரவகைகள்
போன்றவற்றை தெரிவு செய்ய நாடுங்கள்

ரீ.எஸ்.ரீ.பி.ரீ.அன் கோ

போன் : 31035
49, டாம் வீதி, கொழும்பு 12

உமாதேவியார் : ''சுவாமி! என்ன ெ ம
மறந்துபோய் இருக்கிறீர்கள்.''

சிவபெருமான் ''ஒன்றுமில்லை. எனது பக்தனெருவன் நந்தி மார்க் கற்பூரம் கொழுத்தி என்னை வழிபட்டுக் கொண்டிருக்கின்றுன். அவன் பக்தியில் என்னையே நான் மறந்து போய் ..''

நந்தி மார்க் கற்பூரம்

தயாரிப்பாளர் :
முருகன் கற்பூரத் தொழிற்சாலை
23, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் போன் 7554

# ஆச்சிக்குட்டிக்கு வாய்ச்ச மாப்பிள்ளை!



C. S. பாஸ்கர்

3 வது காட்சி

புறோ: ''அண்ணை... ஆறுமுக மண்ணை! ஆரோ இலண்டனாலை வந்து உங்கடை வீட்டிலை நிக்கினமாம்... உங்கை எல்லாரும் பறையினம். மெய்யே...

ஆச்சி: ''ஓ... என்ரை சொந்தக்காரப் பெடியன் தான்... என்ரை மேளைக் கட்டப் போறனெண்டு எழுதினான்... அடிச்சு விட்டன் ஒரு தந்தி.. பிளேனாலை கதறிக் கொண்டு, பறந்து வந்து காலிலை விழுந்து கிடக்கிறான் ''

புறோ; ''என்ன உங்கடை மேளுக்கே, அந்த இலண்டன் மாப்பிள்ளையை கட்டி வைக்கப் போறியள்? (ஆச்சரியத்துடன்)

ஆறு: ''பின்னை... என்ன... என்ரை மனிசி ஆர்.. ஆச்சிக்குட்டிக்கே கட்டி வைக்கப் போறியள்''

புறோ: எட... எட.. எங்கடை பென்சனியற்றை பெட்டை ஒருத்தி இருக்கிறாள்... எஸ்... எஸ் சி ஏழுதரம் எடுத்துப் பாஸ்பண்ணினவளாம்.. எண்டாலும் பெட்டை வலு கெட்டிக்காரி காசெண்டால்.. சும்மா... கட்டுக் கட்டா சிங்கப்பூர் காசுகள் மடிப்புக்குலையாமல் வைச்சிருக்கினம்... ஓ மெய்தான்! அவையும் ஒரு இலண்டன் மாப்பிளைக்குத் தான் ஓடித்திரியினம் பெட்டையும் சும்மா இல்லை கட்டினால் ஒரு இலண்டன் மாப்பிள்ளையைத் தான் கட்டுறது எண்டு ஒற்றைக் காலிலை நிக்கிறாளாம்... ஒண்டு ஒண்டரை இலட்சம் சீதனமாய் குடுப்பினம்.''

ஆறு: ''ஏன்? பெட்டை குருடு செவிடே?''

ஆச்சி: ''இந்தக் காலத்திலை உப்பிடிச் சீதனம் குடுக்கத்தானே வேணும்'' இப்ப பெடியளுக்கெல்லே தட்டுப்பாடாக் கிடக்கு.''

ஆறு: ''எட பெடியளுக்கு உப்பிடித் தட்டுப்பாடு வருமெண்டு தெரிஞ்சிருந்தால் அந்த நேரம்.. உன்னைக் கட்டாமல் இப்ப.. இவர் புறோக்கரைப் பிடிச்சு எக்கச்சக்கமான சீதணத்தோடை கட்டலாமே. தெரியாமல் அவசரப் பட்டெல்லோ விட்டன்...

ஆச்சி: ஓ.. இப்ப அதுக்கென்ன... பேசாமல், என்ரை கலியாண எழுத்தைத் தள்ளிப் போட்டு வேறை ஒண்டைப் பேசிச் செய்யுங்கோவன் இப்ப பெட்டையளுக்கே பஞ்சம்? பஸ்ராண்டுக்குக் கரப்போடை போனால், எத்தனை விதமான பெட்டையளை, விதம் விதமான கோலத்தோடை பிடிச்சுக்கொண்டு வரலாம் தெரியுமே...?

புறோ: ''அந்தப் பென்சனியர்.. இண்டைக்குக் காலமையும் தேடிக் கொண்டு வந்திட்டார்... தன்ரைமேளுக்கு, ஆர் லண்டன் மாப்பிள்ளையைக் கொண்டா என்று ஒற்றைக் காலிலை நிக்கிறாளே... அவளுக்கு... உங்கடை லண்டன் மாப்பிள்ளையைப் பேசி சம்பந்தத்தை முடிச்சு வைச்சால் எனக்கு ஆயிரம் ரூபா தாரனெண்டு சொல்லிருக்கிறார் பென்சனியர்..''

ஆறு: ''புறோக்கர்! வேணுமெண்டால் உமக்கு இரண்டாயிரம் ரூபா தாறன்... உந்தச் சம்பந்தத்தை விட்டுட்டு.. வேறை ஏதேனும் அலுவலைப் பாரும். நான் உந்தச் சம்பந்தத்துக்கு ஓமெண்டாலும் அந்தப் பெடியன்... ஆர் எங்கடை லண்டன் பெடியன்தான்... பாவம் சம்மதிக்காது.. என்னிலை தன்ரை உயிரையே வைச்சிருக்கிது... அங்கிள்... அங்கிள்... மாமா.. மாமா... எண்டு காலுக்கை கிடந்து கதறிது ''

ஆச்சி: ''என்னை அன்ரி.. அன்ரி.. எண்டு இங்கிலீசிலை கிடந்து உருகுது...''

ஆறு: ''நீர் இதுக்கை வில்லன் மாதிரி.''

[மாப்பிள்ளை வெளியிலிருந்து வருகின்றார்]

ஆச்சி: ''இஞ்சாருங்கோ லண்டன் தம்பி! எங்கடை மாப்பிள்ளை வாறார் வாறார்...''

மாப்: "Uncle Good Evening..''

ஆச்சி: (புறோக்கரைப் பார்த்து) ''என்னைத்தான்! புறோக்கர் என்ன தறதற எண்டு முழுசுறீயள். Uncle எண்டால் நான்தான் மாமா.. மாமா...''

மாப்: '' Auntie ! Auntie ! Good Evening Auntie !''

ஆறு: ''அது அவவை அவவை சொல்லுறார்''

புறோ: ''எட! அங்கிள் என்டால் ஆறுமுகத்தார்! அன்ரி எண்டால் ஆச்சிக்குட்டி. சும்மா சொல்லக் குடாது வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன் தான்''

மாப்: என்னாலை வெளியிலை தலை காட்ட முடியேல்லை I can't go out''

✱ காதலின் உடன்பிறப்பே வேதனை காதல் வயப்பட்டவர்கள் வேதனைப்படாமல் இருந்ததேயில்லை ✱

புரோ: கண்டபடி எல்லாரிட்டையும் கடன் கிடன் வாங்கிப் போட்டாரோ ? (ஆறுமுகத்தரைப் பார்த்து)

மாப்: "Uncle? who is this nonsence?"

புரோ: "தம்பி என்னவாம் ?"

ஆறு: ஆர் இந்த மேதாவி எண்டெல்லே கேட்கிறார்

புரோ: என்னைத் தெரியேல்லையே! தரகு தம்பையா! புரோக்கர்! உங்கை ஊர் உலகத்திலை என்னைத் தெரியாதவை ஒருத்தருமில்லை! இலண்டனிலை கேள்விப் படேல்லையே..
ஆறு ஓ.. லண்டனிலை பெரிய நோட்டீசும் ஒட்டி சாணகமும் அடிச்சு வைச்சிருக்கிறாங்கள்

மாப்: "Oh! Uncle! who is this donkey? shouting like a dog!"

ஆறு: தம்பி! இவர்தான் இஞ்சத்தையில் ஜசாங் கிரி.. கிரி!

புரோ: ஜசாங் கிரி கிரியோ? ஆர் நானோ? (கோபத்துடன்)

ஆறு: புரோக்கர்! என் இப்ப துள்ளுறீர்... ஜசாங் கிரி–கிரி எண்டால் லண்டன் பாஷையிலை பெரிய அறிவாளி, மேதை எண்டு அர்த்தம்!"

புரோ: அப்ப இவர்... சென்னடியைப் போலை எண்டு சொல்லுங்கோ.. அவருக்கு வடிவா விளங்கப் படுத்தண்ணை! யேஸ்... I ஜசாங் கிரி—கிரி தம்பி.

ஆறு: தம்பி! லண்டன் தம்பி! ஜசாங் கிரிகிரி எண்டால்..... இவருக்கு.. ஆர் புரோக்கருக்கு.... No head! No head!

புரோ: ஆறுமுகத்தார்... பேந்தென்ன, நீரும் இங்கிலீசு

ஆறு: நானென்ன எனரை மனிசி ஆர் இவதான் ஆச்சிக்குட்டி பேசினவெண்டால் வெள்ளைக்காரன் விறைச்சுப் போவன்.

(தொடரும்)

## வெள்ளம் வருமுன்.... .....

தாயார்; மதி! அங்கே, என்ன குடித்துக் கொண்டிருக்கிறாய்?

மதி: மருந்து தானம்மா குடித்துக் கொண்டிருக்கிறேன்.

தாயார்: உன் உடம்பிற்கொன்றுமில்லையே.. ஏன் மருந்து குடிக்கிறாய்?

மதி: எங்கள் வகுப்பு ஆசிரியர் சொன்னார், வெள்ளம் வருமுன் அணைகட்ட வேணும் எண்டு. அதாவது எதையும் முனனேற்பாடாகச் செய்து வைச்சால் நல்லதெண்டு.. அது தான்...

தயார்: ......?......! ... !

கே. எஸ். வரன்

## கனிவான உன் அங்கம் இனிக்கிறது தெருவினர்க்கு

என்னருமைக் காதலியே!
எழில் கொண்ட ஓவியமே
எடுப்பாக மினி போட்டு
எங்கேயோ சென்றிடவே,
படுகின்றாய் பல கஷ்டம்
படுக்கையிலே கனாக் கண்டேன்
பட்டினம் நீ போகின்றாய்
பல சரக்கு வாங்குகிறாய்!
பொங்கும் நாளதனிலே
எங்கும் சனக் கூட்டம்
மங்கலப் பொழுதிருக்கும்
சங்கதி என்ன வெனில்
நடை வீதி தனிலே ஓர்
சடைநாய் தன்னைத் துரத்த
உடையோ மினி அதனாலே
நடையே தான் தடம் புரள
மினி தடக்கி விழக் கண்டேன்
இனி என்ன சீச்சீச்சீ......
கனிவான உன தங்கம்
இனிக்கிறது தெருவினர்க்கு
இத்துடனே விழித்து விட்டேன்
ஏனம்மா வீண் கரைச்சல்
சத்தியமாய் சொல்லுகின்றேன்
மினிவேண்டாம் விட்டு விடு!

—நயினை அருள்

அழகான வதனங்களை, என்றும் எழிலாகப் படம் பிடிக்க
வளமான நிலையமாக இன்று, வடபகுதியில் திகழ்வது
திருமணம், பிறந்ததினம் போன்ற சகல விழாக்களையும்
படம் பிடித்து மகிழ

சித்திராலயா ஸ்ருடியோ
CHITRALYA STUDIO

மாணவர்களே!
நேர்முகப் பரீட்சைகள் போன்றவற்றிற்கு வேண்டிய சான்றிதழ்களை துரிதமாக, குறிப்பிட்ட நேரத்தில் போட்டோ ஸ்ரட்ஸ் பிரதிகள் எடுப்பதற்கு சிறந்த இடம்.

ஸ்ரான்லி வீதி யாழ்நகர் போன் 522

செல்வி V. பவளராணி வளாக வீதி, திருநெல்வேலி

※ தீசண்ணு !
'அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்' என்ற வாக்கியத்தை ஆதரிக்கிறீரா?

⚙ தங்காய்!
உமது அன்னையையும் பிதாவையும் எனக்குத் தெரியாதே!

S.S.ஆனந்தன் மானிப்பாய் வீதி, உடுவில்

※ 1977ம் ஆண்டின் தேர்தல் முடிவு எப்படியிருக்கும் ?

⚙ நடந்தால்..... தற்போதைய ஆளுங் கட்சி அல்லது எதிர்க்கட்சி பதவிக்கு வரும்.

K. A. லிங்கம் 5ம் யூனிற், இராமனுதபுரம்

※ எனது காதலி, என்னைக் கண்டதும் 'கலைமகள் கைப்பொருளே! உன்னைக் கவனிக்க ஆளில்லையோ?' எனப் பாடுகிறுள் ஏனே?

⚙ கண்டபடி நீர் உமது காதலியைச் சுற்றி வருவது அவருக்குப் பிடிக்கவில்லைப்போலும், அதுதான் உம்மைக் கவனிக்க உமது வீட்டில் ஆவில்லையோ எனப் பாடுகிறுராக்கும்.
(நல்ல புத்திசாலிதான் உமது காதலி ! கவனம் ! அவளது தேப்பன், தமையன் ஆகியோர் உம்மைக் கவனித்தாலும் கவனிப்பார்கள்)

# உங்கள் கேள்விகளும்

செ. நாகராசா கட்டுவன் தெற்கு, தெல்லிப்பழை


※ அடிக்கிற கைதான் அணைக்குமா?

⚙ இல்லையில்லை. அடிக்காத கையும் அணைக்கும். சில வேளை அணைத்த பின்பும் நடக்கும். உமக்கு எப்படியோ?

சி. கிளி, உடுவில் மேற்கு, சுண்ணுகம்

※ பணக்காரர்கள் ஏழைகளையும், ஏழைகள் பணக்காரர்களையும் திருமணம் செய்தாலென்ன?

⚙ யாரோ பணக்காரப் பெண்ணைப் பார்த்து விட்டீர்போலும்...
பாவம்.. அந்தப் பெண்! ஐயோ பாவம்!



ஜே. சாஹில் ஹமீது அவ்வல் சாலிய வீதி, கொழும்பு-14

※ மாதம் ஒரு தடவை வெளிவரும் கலகலப்பை மாதம் இரண்டு முறையாவது வெளியிட்டு எமது ஆவலைப்பூர்த்தி செய்வீர்களா?

⚙ மாதம் இரண்டுமுறையல்ல, முப்பதுமுறை கூட வெளியிடலாம். ஆனல் அதை வாங்கிப்படிக்க ஒரே ஒரு சாஹில் ஹமீது மட்டும் போதாதே!

ஆனந்தன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

※ என்னைத் திருமணம் செய்ய ஒரு பெண்ணும் விரும்புகிறுர்களில்லையே?

⚙ உடனடியாகச் சங்கக்கடையில் ஒரு வேலை எடுக்கவும். ஒன்றல்ல, ஒன்பது பெண்கள் போட்டிபோட்டுக்கொண்டு கியூவில் நிற்பார்கள்!

# உதவாத பதில்களும்

S. சிவலிங்கம் 36, புதியசந்தை, வவனியா

※ உலகத்தில் எல்லோரும் ஆண்களாக இருந்தால் என்ன நடக்கும்?

⚙ பெண்களிடம் எவரும் அடி வாங்கமாட்டார்கள், முடிமயிர் விற்பனையும் நடைபெறுது.

S. சத்தியானந்தன் மாத்தளை

※ காதல் எப்போது கசக்க ஆரம்பிக்கிறது?

⚙ காதலியின் அண்ணன் அல்லது அப்பனிடம் அடி வாங்கி வார்ட்டில் படுத்திருக்கும்போதுதான்!

A. சிறீகாந்தன் 37, 2ம் யூனிற், வவுனிக்குளம்

※ நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கின்றுளா என்று தெரியவில்லை. இதனை அறிய ஒரு வழி கூறுங்கள்?

⚙ சிறீ!.. அவளைத் தனிமையில் சந்திக்கும்போது பார்த்துச் சிரி! அவள் அடித்தால்...!

பொங்கல் திருநாளாம்
பெருநாளாமதனில்
எங்கள்
வாழ்த்துக்களை
ஏற்றே மகிழ்ந்திடுவீர்!
O. A.
பரமசிவம்பிள்ளை
4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11

குறைந்த செலவில்
சிறந்த அச்சு வேலைகட்கு
நாடுங்கள் !
சுரபி அச்சகம்

விவசாயிகளே !
உங்களுக்குத் தேவையான
சகலவிதமான
இரசாயனப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
வாங்க சிறந்த இடம்.
சுரபி கெமிக்கல்ஸ்
கந்தரோடை வீதி, சுண்ணுகம்.

## ஸ்ரைக் துணுக்குகள்

**ஒருவர் :** என்னப்பா உன்ரை மகன் ஓமாணிலை இருந்து என்ன எழுதியிருக்கிறார் ?

**மற்றவர் :** அங்கையிருந்து என்ன கொண்டு வாறதெண்டு கேட்கிறார் ?

**1ம்ஆள் :** கொஞ்ச மண்ணெண்ணை, பெற்றோல் அனுப்பச் சொல்லி எழுது. அதுதான் இப்ப தட்டுப்பாடு.

## அன்புள்ள மான்விழியே!

**நளினி :** ஏன்டி சுஜந்தா உனக்கு இன்று பார்சல் போஸ்ட்டில் என்னடி பொங்கல் பரிசு வந்தது? உன் லவ்வர் சாரி ஏதாவது அனுப்பியிருந்தாரா ?

**சுஜந்தா :** ஒன்றுமில்லையடி கொழும்பிலிருந்து 2 றாத்தல் 'பாண்' அனுப்பியிருந்தார் !

## சைற் பிஸ்னஸ்

**ஒருவர் :** என்னப்பா அவன் கொழும்பிலை C. T. B. சைற் பிசினஸ் என்றியே என்ன பிசினஸ் ?

**மற்றவர் :** பஸ் சீற் புக்பண்ணி றிசீற் வைத்திருந்தா பஸ் வாற நேரத்திலை ஆட்கள் 2, 3 மடங்கு விலைந்த விற்கிறது அதுதான் ..

**பிக்பொக்கட் I :** என்னப்பா கவலையோடே இருக்கிறாய் ?

**பிற்பொக்கட் II :** றெயில் ஓட்டம் இல்லை, தொழிலும் இல்லை, அதுசரி .. ஒருமாதிரி ...

**பிக்பொக்கட் I:** ஒன்றுமில்லை C. T. B. யும் ஸ்ரைக் பண்ணினால் என்பாடும் ..... ?

## இடமாற்றம்

**முட்டை 1 :** ச்சா என்ன வாழ்க்கை றெயில்வே ஸ்ரைக்கால், எங்கடை வாழ்வே ஒழியப்போகுது இனி பஸ், தியேட்டர் எங்காவது போனால்தான் பிழைக்கலாம் !


அண்ணா தயாரிப்புக்களான,

**கோப்பி, தேயிலை, பற்பொடி, பத்திகள். பவுடர்**

போன்றவை தரத்திலுயர்ந்தவை எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பபளர்களும், விநியோகத்தர்களும் :

**அண்ணா தொழிற்சாலை**

இணுவில் — போன் : 7412

கிளை : 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன் : 7413



சிறந்த
★ உரப் பசளை வகைகள்
★ கிருமி நாசினிகள்
★ களைகொல்லிகள்
போன்றவை
(விவசாய ஆலோசனைகளுடன்)
விற்பனையாகிறது

**ஃப்ளோரா**
**Flora**

சுண்ணாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கண்மையில்
கே.கே.எஸ். வீதி, சுண்ணாகம்.



உங்கள் வியாபார ஸ்தாபனங்கள், விற்பனைப் பொருட்கள், மற்றும் விழாக்கள் போன்றவற்றை நவீன முறையில் விளம்பரம்செய்ய இன்றே நாடுங்கள் !

**விக்ரர் அன் சன்ஸ்**

மக்கள் நவீன சந்தை
விளம்பர சேவை
இல. 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 7346



எங்கும் இன்பம்,
பொங்கிப் பெருக,
எங்கள் வாழ்த்தை
என்றும் பெறுவீர் !

**மலைமகள் அன் கோ.,**

உள்ளூர் விளைபொருள்
விற்பனையாளர்
(கமிசன் ஏஜண்ட்ஸ்)
174, 4-ம் குறுக்குத் தெரு.
கொழும்பு-11
போன் : 24361



கொண்டாடும் பண்டிகை,
கோலாகலமாக,
என்றும் நாடுங்கள் !

**ஸ்ரீ வரதாஸ்**

புடவை மாளிகை
155, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன் : 7635


**When you retire to bed think over what you have been doing during the day.**—மில்க்வைற் செய்தி

# கேள்வி - பதில்

தொடர்ச்சி

செல்வ S செல்வரத்தினம் கோப்பாய் தெற்கு

என்னைக்கண்டதும் எல்லாப் பெண்களும் சிரிக்கிறார் ள் என்ன காரணம்?

பைத்தியங்களைக் கண்டால் யார்தான் சிரிக்க மாட்டார்கள்? !

S S. ஜீவா கொக்குவில் மேற்கு

தீசா! உலகம் சுற்றுவதால் இராப்பகல் உண்டாகிறது!
மனிதன் சுற்றினால்?

நிச்சயமாக அவருக்கு நிறைவெறி!

க. இரத்தினசிங்கம் வில்லடி பூனகரி


தீசன் அண்ணா?
கடவுள் ஏன்? கல்லானார்.

அவர் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.
இதனை வெட்டி ஒட்டுக.

உதவாத கேள்விகள்
கலகலப்பு
இணுவில்

வெட்டி ஒட்டவும்

## காதல் பா



அன்பே ஆரமுதே அழகே
என் பொற்சிலையே,
பொன் போல் பளபளக்கும்
நைலக்ஸ் சாறியுடன்
மின்னும் சில பொருட்கள்
நான் தருவேன்—கோமளமே
என்மேல், காதல்
நீ கொள்!

நயினை அருள்!

## நானே நான்

ஒருவர்: ''என்னப்பா! நேற்று உன்ரை மனைவி, உன்ரை மகனைப் போட்டு கதற கதற அடிச்சா போலை கிடக்கு... இதைப்பற்றி நீ யொண்டும் விசாரிக்கிறேல்லையோ...''

மற்றவர்: விசர்க்கதை கதைக்கிறாயப்பா! அடி விழுந்ததே எனக்குத்தானே! அதைப் பாத்திட்டெல்லோ என்ரை மகன் கத்தினவன்''

S. கணேசமூர்த்தி
மாங்குளம்

# "பேயானாலும் பெண்சாதி நாயானாலும் நாயகி"

(7 பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அவளை மணந்து கொள்ளுகிறார்கள்.

பணத்தோடு வந்தவள் பகட்டாக வாழ நினைக்கும்போது, பம்பரமாக சுழலும் பரிபாபத்துக்குரிய கணவனைப் பார்த்து வெட்கப்படுவதா? (வேதனைப் படுவதா? என்று) தெரியவில்லை.

இவர்களைப் போன்ற பலதரப்பட்டவர்கள், மனைவியை அடக்கி ஆளாக்கியதை தைரியமில்லாதவர்கள் பயந்த சுபாவமுள்ளவர்கள் ஆகியோர் என்று தம்மைத் தாமே சமாதானப் படுத்திக் கொண்டு வாழ வேண்டியது தான்!

பொதுவாக இவ்வாள்கள் ஓயாமல் சொல் மழைபொழிந்து கொண்டே இருப்பார்கள். அதுவும் உச்சஸ்தானியில் எட்டுக்கட்டைச் சுதியில்! இப்படியானவர்களை மணந்து கொண்டவர்கள் செவிடாக இருப்பின் நல்லது! அப்படியில்லாத பட்சத்தில் இரண்டு அளவான பஞ்சுத் துண்டுகளை எடுத்து தேவையேற்படும்போது காதில் வைத்துக் கொள்ளலாம்.


மனைவி தனது சகஸ்ரநாம அருச்சனையை ஆரம்பிக்கும் முன்னரே கண்களை இறுக்கி மூடிக்கொண்டு இஸ்ட தெய்வத்தை வேண்டி தெரிந்த தேவாரத்தை அரை குறையாக வேனும் அவளின் குரலை முறியடிக்கும் வகையில் பாடவும்.

சௌகரில் படாதபோது வீட்டில் உள்ள வானொலியை அதிகபட்சளவு சுத்தமாக ஒலிபரப்பிவிட்டு கேட்கலாம். எந்த ஸ்ரேசனானாலும், எந்த மொழியிலானாலும் பரவாயில்லை. ஆனால்! ஒரு விண்ணப்பம்! இதன் மூலம் உங்கள் வானொலிக்கும் ஆபத்து நேரலாம்.

எனக்குத் தெரிந்த நண்பரொருவர், இதேபோலச் செய்ய முயன்றபோது அவரது மனைவி வெளிநாட்டு வானொலி என்று கூடப் பார்க்காது தூக்கி ஒரே எறியில், தரையில் மோதி, தவிடு பொடியாக்கி இருக்கிறார்.

எனவே எச்சரிக்கையாக இருக்கவும் மனைவி கண்டபடி பேசி ஓயும் போது அவளின் களைப்பைப் போக்க தயாராக வைத்திருந்து கோப்பியோ தேனீரோ அல்லது வேறெதாவதோ பானங்களைக் கொடுத்திருக்கவும். இதன் மூலமாக அவளுக்கு உங்கள்மீது கருணை எழக்கூடும். ஆனால் சிலவேளை அபிஷேகம், ஆராதனை, அருச்சனை போன்றவையும் நிகழக்கூடும். எதற்கும் முன்னெச்சரிக்கையாக இருப்பது மிகவும் நன்று.

(மிகுதி அடுத்த இதழில்)



The Farmers are born with the problem and their lives end with problem

**(From the film Seven-Samurai)**

பெரியவர்கள் குடித்தால் அவர்கள் வாழ்க்கை மட்டும் பாதிக்கப்படும் இளைஞர்கள் குடித்தால் சமுதாயமே பாதிக்கப்படும்

ஆதவன் மகிழ
அமுது படைப்போம்!
அகிலம் சிறக்க
அவனைத் தொழுவோம்!!

சுத்தமான, சுவையான உணவு வகைகள், சூடான குளிரான பான வகைகள் அனைத்திற்கும் சிறந்த இடமென்று உயர்ந்தோர் போற்றுவது

**கிறீன்லன்ட்ஸ்**
**ரூறிஸ்ற் ஹோட்டல் லிமிட்.**
**Greenlands**
**Tourist Hotel Ltd.**
பம்பலப்பிட்டி

நாடுபோற்ற நற்பணி புரிந்து
வீடு சிறக்க வளங்கள் குவிக்கும்

0 நுகர்ச்சிப் பொருட்கள்
புடவை வகைகள்
0 எரிபொருட்கள் கிருமிநாசினி வகைகள்
0 கால்நடைத் தீனிகள்
பாடசாலைப் புத்தகங்கள்
0 இரும்புச் சாமான்கள்
ஒப்பந்த வேலைகள்
0 கிராமிய வங்கிகள்

இன்னும் பல தொழிற்பாடுகளை தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது.

**சுன்னாகம் ப. நோ.**
**கூட்டுறவுச் சங்கம்**
போன்: 303 சுன்னாகம்.

ராஜி: மாலா! வீட்டை இவ்வளவு நவீன தளபாடங்களால் அலங்காரம்செய்து வைத்திருக்கிறாயே— இவையெல்லாம் உன் கணவர் வெளி நாட்டிலிருந்து அனுப்பிவைத்தவையா?

மாலா: இல்லையடி! இதெல்லாம் நான் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி பேணிசிங் மார்ட்டில் வாங்கியவையடி!

ராஜி: என்ன? இங்கேயா?

மாலா: இதென்னடி இதைவிட எத்தனையோ விதமான தளபாடங்கள் அங்கே வாங்கலாமடி!!

**ஸ்ரான்லி**
**பேணிசிங் மார்ட்**
5ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்

எந்நாளும் பொன்னாளாய்
ஏற்றங்கள் புவிகாண
இந்நாளில் வாழ்த்துகின்றோம்!

**வெலிகம ஸ்டோர்ஸ்**
உள்ளூர் விளைபொருட்களின்
கமிஷன் விற்பனையாளர்கள்
139, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11

ராணி: ஏண்டி தேவி! நீ அடிக்கடி மிகவும் அழகான ஆடைகளை அணிகின்றாயே. அத்தனையும் உன் காதலர் வெளிநாட்டில் இருந்து அனுப்பினவையா?

தேவி: போடி! அந்தாள் ஒண்டுமே அனுப்புறதில்லையடி. சரியான கசவாரம். இதெல்லாம் நான் சில்க் கவுஸில் வாங்கியவை

சிறந்த ஆடைகள் மற்றும் சூட்டிங் சேர்ட்டிங் போன்றவற்றிற்கு

**லிங்கம் சில்க் கவுஸ்**
18, நவீன சந்தை, யாழ்ப்.

பொங்கலோ பொங்கலென்று
பெரியோர்கள் போற்றிடும்
மங்கலத் திருநாளில்
மகிழ்வோடு வாழ்த்துகின்றோம்
சிறந்த அச்சுவேலைகளை குறைந்த செலவில் செய்துகொள்ள

**சுரபி அச்சகம்**

விவசாயத் துறைகளை வளமாக்க சகல விவசாய இரசாயனப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் வாங்க

**சுரபி கெமிக்கல்ஸ்**
கந்தரோடை வீதி, சுன்னாகம்

# LATE MAIL

★ சிவத்தமிழ் செல்வி திரு. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது ஆசிரிய பதவியில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்டு தனது நேரத்தை பூரணமாக சைவசமய வளர்ச்சிக்கு அர்ப்பணிக்க முன்வந்திருக்கிறார். அம்மையாரின் பணி மேலும் ஓங்க ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

★ இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு சென்று பெரும்புகழ் பெற்றுத் திரும்பிய இணுவையூர் திரு. உ. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு சமீபத்தில் வல்வெட்டித்துறை அருள்மிகு கப்பலுடையவர் தேவஸ்தானத்தில் வைத்து இன்னிசை வேந்தன் என்ற பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.

★ யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு சேவையாளராகக் கடமையாற்றிய திரு. வீ. சத்தியநாதன் அவர்கள் கொழும்பு மாவட்டத்திற்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

☆ வவுனியா மாவட்ட வி.வி. சேவையாளராகக் கடமையாற்றிய திரு. சிவமுத்துலிங்கம் அவர்கள் யாழ் மாவட்டத்திற்கு மாற்றலாகி இம்மாதம் வருகிறார்.

★ வடபகுதியில் கோப்பிப் பயிர் செய்கையை விருத்தி செய்யும் நோக்குடன் 'அண்ணா' தொழிலதிபர் திரு. எஸ். பி. நடராசா அவர்கள் கோப்பி பயிர் செய்கைபற்றிய ஒரு நூலை இலவசமாக வெளியிட்டிருக்கிறார்

★ இணுவில் ஜோதிவி சமூகத்தினர் எடுத்த முயற்சி காரணமாக, இளந்தாரி சனசமூக நிலையத்தின் முன்பாக ஒரு தபால் பெட்டி இம்மாத நடுப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.
இதேபோல கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கண்மையிலும் அப்பகுதி இளைஞர்கள் முயற்சியால் ஒரு தபால் பெட்டி அமைக்கப்பட்டுள்ளது.

★ சுன்னாகம் ப. நோ. கூட்டுறவுச் சங்கப் பகுதியில் மறைந்த பெரியார்கள் பலருக்கு அவர்கள் ஞாபகார்த்தமாக சிலைகள் அமைப்பதற்கு சு.ப.நோ.கூ. சங்கத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

★ வடபகுதியில் முந்திரிகைப்பயிர் வளர்ச்சிக்கே ஒரு காரண கர்த்தாவாக இருந்த உரும்பிராயைச் சேர்ந்த திரு. கிருஷ்ணசாமி அவர்கள் காலமாகி விட்டார்கள். அன்னாரின் பெருமையை மக்கள் மறந்தாலும் ஆங்காங்கே காய்த்துக் கொண்டிருக்கும் முந்திரிகைச் செடிகள் நினைவுறுத்திக்கொண்டே இருக்கும். (தகவல் பாஸ்கர்)

விவசாயப் பெருமகன்
நம்நாட்டின் தலைமகன் !
அவனென்றும் வளம்காண
அன்போடு வாழ்த்துவோம் !

## எஸ்.பி.என். அன் கொம்பனி

( கமிஷன் ஏஜண்ட்ஸ் )

உள்ளூர் உற்பத்திப்பொருள்
விற்பனையாளர்கள்

181, 185, கெஸிசர் வீதி, கொழும்பு-11

போன்: 20615

தமிழர்கள் இல்லமெங்கும்
தேங்கிடும் அழுக்கைப் போக்கி
தூய்மையைப் பேணிக்காத்து
துலங்கிடும் சோப்பால் என்றும்,
மில்க் வைற் யுகத்தைப் படைத்து
மேலான சேவைகள் செய்தும்
இலங்கிடும் நிறுவனத்தாரின்
இனிய நல் வாழ்த்துக்களாம் ?!

எங்கும் என்றும் எப்பொழுதும்
சிறந்ததையே வாங்கிடுவீர் !
மில்க்வைற் பொருட்களையே
பாவனை செய்திடுவீர் ;

## மில்க் வைற் சோப்
### தொழிலகம்

த.பெ.இல: 77 கே.கே.எஸ்.வீதி,
போன் : 7233 யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளர்களுக்கும்
விற்பனையாளர்களுக்கும்
இதயங்கனிந்த நல் வாழ்த்துக்கள் !!

ஒருவர்: என்னப்பா! உங்கடை கடைப்பலகாரங்கள் மிகவும் மென்மையாகவும் சுவையாகவும் இருக்கிறது! என்ரை மனிசிகூட உப்பிடித் திறமையாகச் செய்து தரமாட்டாள்.

கடைக்காரர்: நாங்கள் 'பேட் பேக்கிங்' பவுடர் பாவிக்கிறோம் பாருங்கோ அதுதான்.

## பேட்
BIRD

* பேக்கிங் பவுடர் !
* ஜெலி கிறிஸ்டல் !
* கஸ்ரர்ட் பவுடர் !

போன்றவற்றைத் தெரிந்து வாங்குங்கள்
தயாரிப்பாளர்கள்: பேட் இண்டஸ்றீஸ்
294, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை,
போன்: 35482 கொழும்பு 13

இலவசம்
உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளக்கூடிய தித்சுவைப் பாடல்களின் விபரங்களடங்கிய கை நூல் இலவசமாக வழங்கப்படுகிறது.
சிறந்த தமிழ், ஆங்கில, இந்தி, சிங்கள சினிமாப் பாடல்கள், பொப் பாடல்கள், பக்திப் பாடல்கள் போன்றவற்றை பதிவு செய்ய இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

## நியூ விக்ரேஸ்
33, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
போன்: 7375

கோயில் உற்சவங்கள் மற்றும்
மங்கள வைபவங்களுக்குத் தேவையான
வாசனைத் திரவியங்கள்
ஆயுர்வேத மருந்துகள் வாங்க

## க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
( மருந்துக் கடை )
76, பெரியகடை, யாழ்ப்பாணம்
போன்: 7135

விவசாயிகள் வளர்ச்சியே எமது நாட்டின் வளர்ச்சி !
அவர்கள் வளர்ச்சியே எங்கள் முயற்சி!

TORA ரோரா TORA


இப்பத்திரிகை 68, சுந்தரபவனம், இனுவில் கிழக்கைச் சேர்ந்தவரும், இதன் உரிமையாளரும் ஆசிரியருமான (எஸ். கே. தீசன்) சி. கேதீஸ்வரன் என்பவரால் யாழ். மாநகர பல நோக்க கூட்டுறவுச் சங்க கூட்டுறவு அச்சகத்தில் அச்சிட்டு ஜனவரி மாதம் வெளியிடப்பெற்றது. 789—76.